25 FEB 1999

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 13வியாழக்கிழமை (25-02-1999) UTHAYAN- A Lively National Tamil Daily கதிர்:77

# செம்மணி புதைகுழிகள் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும்!

## புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்ரவரி 25

'செம்மணி மனிதப் புதைகுழி விடயம் சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களின் நேரடிக் கண்காணிப்பில் அந்த அமைப்புக்களின் பிரதிநிதிகளால் விசாரணை செய்யப்படவேண்டும்'.

விடுதலைப் புலிகள் அமைப்பு மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்: நீதிமன்றம் இது தொடர்பான விசாரணைகளை நடத்துவதை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

செம்மணிப் புதைகுழி விடயம் தொடர்பாக யாழ். நீதிமன்றமோ இலங்கை அரசோ எடுக்கும் நடவடிக்கைகள் நீதியான தீர்வையும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் வழங்க முடியாது என்றும்—

தற்பொழுது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வெளி உலகை ஏமாற்றும் முயற்சியே என்றும்— புலிகள் அறிவித்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

செம்மணிப் புதைகுழி விட-

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப சமாதானக் குழுவின் முயற்சிக்கு ஒரு சபாஷ் போட்டதுடன் முற்றுப் புள்ளி வைச்சாச்சுப் போல...!

## மனிதத் தலைக்குரியவர் இனம் காணப்பட்டார்!

### கரவெட்டியைச் சேர்ந்தவர்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். நகரின் மையப் பகுதியில் நவீன சந்தைக்கு அருகே வடிகாலை அண்டி வீசப்பட்டுக் கிடந்த ஆணின் மனிதத் தலைக்கு உரியவர் கரவெட்டியைச் சேர்ந்தவர் என நேற்று இனங் காணப்பட்டார்.

நல்லூரடியைச் சேர்ந்தவரும், கரவெட்டி கன்பொல்லை வீதியில் வசித்தவருமான இராஜரத்தினம் இராஜேஸ்வரன் (23 வயது) என்பவரின் தலையே அது என அவரது தந்தையான இராஜரத்தினம் இனங்காட்டியுள்ளார்.

பிரஸ்தாப இளைஞரைக் கடந்த 21 ஆம் திகதி முதல் காணவில்லை என்று அவரது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் அலுவலகத்தில் விசாரணை

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். நகரப் பகுதியில் கடந்த திங்கள் இரவு மனிதத் தலை ஒன்று வீசப்பட்டது தொடர்பான செய்தி அடுத்த நாள் வெளியான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்ற நடவடிக்கை; நிறுத்தக்கோரி கடிதம்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். மாவட்டத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளை முற்றாக நிறுத்தும்படி விடுதலைப் புலிகளினால் அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இது தொடர்பான கடிதங்கள் யாழ்ப்பாணம், மல்லாகம், ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, சாவகச்சேரி நீதிமன்றங்களுக்கு விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினால் செ. தூயவனின் கையொப்பத்துடன் தபால் மூலம் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் ஆள்கள் காணாமற்போகும் சம்பவங்களும் கைதாகும் சம்பவங்களும் அதிகரித்து வருவதாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தபால் ஊழியருக்கு சம்பள உயர்வு

கொழும்பு, பெப். 25

தபால் ஊழியர்களுக்கு 40 சதவீதசம்பளஉயர்வு கிடைக்கவுள்ளது. தபால் சேவை சீரமைக்கப்படுவதன் மூலம்இந்த சம்பள உயர்வு வழங்கப்படும்.

இந்தச் சம்பள அதிகரிப்புடன் தபால் ஊழியர்களுக்கான கடமை லீவு, இலவச ரயில் டிக்கெட்டுக்கள் எ ப னவும் வழங்கப்படும் என்று தபால்மா அதிபர் எச். எம் எச். கொட்டகதெனிய தெரிவித்தார். (இ—6)

## இலங்கை கடற்படை மீது கருணாநிதி குற்றச்சாட்டு

சென்னை. பெப். 25

இராமேஸ்வரம் கடற்பகுதியில் கடற் தொழிலுக்குச் செல்லும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்கி வருகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்றுச் சட்டப்பேரவையில் உரையாற்றும்போது இதனைத் தெரிவித்தார்.

மீன்பிடிக்கச் செல்பவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்டும், சுட்டுக் கொல்லப்பட்டும் வருகின்றார்கள். இந்தப் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசாங்கமும் போதிய கவனம் எடுப்பதில்லை என்று மு. கருணாநிதி தெரிவித்தார். (இ—6)

## வரதராஜப் பெருமாள் யாழ். வந்து திரும்பினார்!

யாழ்ப்பாணம், பெப். 25

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து நேற்று கொழும்பு திரும்பினார்.

யாழ்ப்பாணத்தில் ஈ. பி. ஆர். எல். எவ். அலுவலகத்தில் தங்கியிருந்து கட்சி ஆதரவாளர்களுடன் கலந்துரையாடிய இவர் நேற்று பலாலியில் யாழ். மாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனாவைச் சந்தித்தார்.

பின்னர் கொழும்பு திரும்பினார். (இ—3)

## யாழ். மர்மக் கொலைகளின் பின்னணியில்தமிழ் இயக்கம்

### ரெலோ குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். நகரப் பகுதியில் இடம்பெறும் மர்மக் கொலைகளின் சூத்திரதாரியாக ஒரு தமிழ் அரசியல் இயக்கம் செயற்படுவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ரெலோ அமைப்பின் செயலாளர் நாயகம் சி. வினோதலிங்கம் விடுத்த ஓர் அறிக்கையில் இவ்வாறு குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:

மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டு சடலங்கள் வீசப்பட்டுக் கிடக்கும் சம்பவங்கள் யாழ்ப்பாண நகரில் தொடர்ந்து நிகழ ஆரம்பித்துள்ளன.

துண்டிக்கப்பட்ட தலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஈ. பி. டி. பியும் கண்டனம்

யாழ்ப்பாணம், பெப். 25

''அண்மைக் காலங்களில் யாழ். நகரப்பகுதியில் அப்பாவி இளைஞர்கள் கடத்தப்பட்டும் கொலைசெய்யப்பட்டும் வருவதையிட்டு நாம் ஆழ்ந்த அதிர்ச்சி அடைவதுடன் இத்தகைய நடவடிக்கைகளையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்''

ஈ.பி.டி.பி: யாழ்.மாவட்ட பொறுப்பாளர் வி. கே. ஜெகன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இந்த இனந்தெரியாத கொலைகளுக்கும் ஆள் கடத்தல்களுக்கும் எதிராக குடாநாட்டு மக்களும் மனிதநேய அமைப்புகளும் உடனடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதோடு எம் மண்ணில் இத்தகைய நிகழ்வுகள் தொடர்வதற்கு நாம் இடமளிக்காது செயற்படுவோம் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

ஈ. பி. டி. பி அமைப்பினராகிய நாம் ஏற்கனவே பல தடவைகள் குடாநாட்டு மக்களுக்கு எம் மத்தியில் ஊடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய ரெஸ்ட் போட்டி

கொழும்பு, பெப். 25

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையிலான ரெஸ்ட் கிரிக்கெட் ஆட்டம் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கொழும்பு எஸ். எஸ். ஸி. மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆட்டமுடிவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 353 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய வீரர் சடகோபன் ரமேஸ் 143 ஓட்டங்களைப் பெற்றார். (இ-3-6)

## சமாதான கூட்டமைப்பின் முயற்சிக்குப் பாராட்டு!

### நாடாளுமன்றில் பிரேரணை

கொழும்பு, பெப். 25

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தேசிய சமாதானக் கூட்டமைப்பு எடுக்கும் முன் முயற்சிகளுக்கு சகல தரப்பினரும் ஆதரவளித்து பொது உடன்பாடு ஒன்றுக்கு வரவேண்டும் என்று அரசியல் கட்சிகள் நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தன.

தேசிய சமாதானக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் வன்னி சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியதைப் பாராட்டும் பிரேரணை ஒன்று சபை ஒத்திவைப்பு நேரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வத்தால் கொண்டு வரப்பட்டது.

தேசிய சமாதானக் கூட்டமைப்பு முன்னெடுக்கும் முன் முயற்சியின் பயனாக அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று பெரும்பாலான கட்சி உறுப்பினர்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## கந்தையா பரமேஸ்வரி

மயிலிட்டி தெற்கு தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா பரமேஸ்வரி 11-2-99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் தம்பிஐயாவின் அன்புப் புத்திரியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையா (பொலீஸ் பென்ஷனியர்) அவர்களின் அன்பு மனைவியும் சிவநேசலிங்கம் (மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்), சிவலிங்கம், சாந்தலிங்கம், லோகேந்திரன், யோகலிங்கம், கலாவல்லி ஆகியோரின் அருமைத் தாயாரும் மகேஸ்வரனின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 11-2-99 அன்று யாழ். கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க. லோகேந்திரன்**
(மகன்)

76, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

(63403)

## கணபதிப்பிள்ளை
## மாணிக்கம்

நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மாணிக்கம் அவர்கள் நேற்று 24 - 02 - 99 புதன்கிழமை நவாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரைசிங்கம் திரவியம், வீரசிங்கம், மங்களேஸ்வரி, இராசாத்தி, கணேசமூர்த்தி (K. G. EM Photo) இராசம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னையா, சற்குணம், தவமணி, புஸ்பராணி, கிருபைராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-2-99) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்துக்கு நண்பகல் 12.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**து. பேரின்பராஜன்**
(பேரன்)
K.G. EM PHOTO

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(63410)

## திருமதி
## மாணிக்கவாசகர்
## மங்கையர்க்கரசி

[முன்னாள் ஆசிரியை, யா/சென். ஜோன்பொஸ்கோ வித்தியாலயம், தற்போது கொ/பம்பலப்பிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி]

திருமதி மாணிக்கவாசகர் மங்கையர்க்கரசி [23-02-99] செவ்வாய்க்கிழமை தெஹிவளையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி அண்ணாமலை தம்பிராசா, தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் செ. மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும் மா. திவாகரனின் அன்புத் தாயாரும் த. நடராஜநேசன் [அமெரிக்கா] த. கிருபாகரன் [லண்டன்], த. யோகராஜா [லண்டன்], திருமதி லீலாவதி கணேசமூர்த்தி [கொழும்பு], திருமதி சரோஜினிதேவி பேரின்பநாதன் [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான செ. நடராஜா, செ. மயில்வாகனம், செ. சேனாதிராஜா, செ. சிவப்பிரகாசம் செ. செல்வரட்ணம் மற்றும் செ. குலசேகரம், செ. தம்பிராஜா, திருமதி ஆறுமுகம்பிள்ளை யோகமலர், ந. இராஜேஸ்வரி, சி. உமா, யோ. வதனி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தெஹிவளையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செ. மாணிக்கவாசகர்** [கணவர்]
**மா. திவாகரன்** [மகன்]

22 A.1/1 B,
Apponso Avenue,
Dehiwella.

[63406]

## டானியல் முத்தையா
## சிவப்பிரகாசம் (கற்கண்டு)

கற்கோவளம், பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட டானியல் முத்தையா சிவப்பிரகாசம் (கற்கண்டு) இறைமகிமைக்குள் ஆறுதல் பிரவேசம் அடைந்தார்.

அன்னார் பூமலரின் அன்புக் கணவரும், சுமோஜனா பாலகுமாரி, ஜீவபாலரமணி, ஜீவபாலநேசன், ஜீவபாலமுரளி, றேனுகாபாலகுமாரி, ஜீவபாலதயாளன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ஹேபேர்ட், யசோதரா, யசிந்தா, அருள்மொழி ஆகியோரின் அன்பு மாமனாருமாவர்.

அன்னாரின் நல்லடக்க வழிபாடு இன்று (25-2-99) வியாழன் காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**

"பாலஜீவனம்"
கற்கோவளம்,
பருத்தித்துறை.

(63396)

## சமய சந்நிதியில்

வடமராட்சி, பெப். 25

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை வீமஏகாதசி உற்சவம் நடைபெறவுள்ளது.

வீமஏகாதசி உற்சவ தினமான அன்று இரவு புராணப் படிப்பும் நான்கு ஜாமப் பூசைகளும் நடைபெற்று விசேட அபிஷேக உற்சவத்துடன் வல்லிபுர ஆழ்வார் வீதிவலம் வந்தருளுவார்.

(ஐ-173)

★ ★ ★

நெடுந்தீவு, பெப். 25

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவதினமாகும் இதனை முன்னிட்டு அந்த நாளை நினைவுகூரும் வகையில் நெடுந்தீவு புனித அந்தோனியார் தேவாலயத்தில் அன்று காலை 7.30 மணிக்கு விசேட திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும் என கச்சதீவு ஆலய மூப்பர் ஞா. அந்தோனிப்பிள்ளை தெரிவித்தார்.

(ஐ-111)

★ ★ ★

கோண்டாவில், பெப். 25

கோண்டாவில் ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் ஏகாதசி உற்சவத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு மூலவர் அபிஷேகம், மூலவர் பூசை வசந்தமண்டப பூசை ஆகியன இடம்பெற்று, சுவாமி உள்வீதி உலா வருவார்.

(ஐ-ரீ)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். வண்ணை வேங்கடேச வரதராஜப்பெருமாள் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு குலசேகர ஆழ்வார் உற்சவமும் பிற்பகல் 4.45 மணிக்கு ஏகாதசி உற்சவமும் நடைபெறும்.

(இ-3)


**ராஜா**
யாழ்ப்பாணம்.
3 ஆவது வெற்றி வாரமாக
அஜித் - தேவயானி
ஹீரா - மணிவண்ணன்
கரன் நடித்த
**காதல் கோட்டை**
இன்று காட்சிகள்
10-30, 2-30
(சி/6565)



**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி
இன்று முதல்
மம்முட்டி - நெப்போலியன்
சிவரன் - கவுண்டமணி
நடித்த
**எதிரும் புதிரும்**
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
(பழைய நேரம்)
T.P. No. 070-212223
(63315)



**நாகம்ஸ்**
சுன்னாகம்.
கார்த்திக் - ரம்பா
கவுண்டமணி
நடித்த
**உள்ளத்தை அள்ளித்தா**
ரசிகர்களின் பஸ் போக்குவரத்து வசதி கருதி
(புதிய நேரம்)
11-00, 2-30
(63404)


## கட்டட வேலை பூர்த்தி

வடமராட்சி, பெப். 25

துன்னாலை காசிநாத வித்தியாலயத்தில் அகதிகளுக்கான நுண்கருத் திட்டத்தினதும் பொது மக்களினதும் உதவியுடன் அமைக்கப்பட்ட புதிய வகுப்பறைக் கட்டட வேலை பூர்த்தி அடைந்துள்ளது. அடுத்த மாதமளவில் இக்கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

(ஐ-173)

# கண்ணீர் அஞ்சலி

எமது கழகச் செயலாளர்
திரு. ந. விஜயசுந்தரம்
அவர்களின் அன்புத் தந்தையார்

## சின்னையா நல்லையா

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

திருமுறைக்கழகம்,
மண்டைதீவு.

[சி/6614]

# கண்ணீர் அஞ்சலி

அமரர்

## சின்னையா நல்லையா

எமது சைவசமய விவகாரக் குழுவின்
கௌரவ பதிப்பாசிரியர்
**திரு. ந. விஜயசுந்தரத்தின்**
தந்தையாரான
அமரர் சி. நல்லையா

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

சைவசமய விவகாரக் குழு,
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.

(சி/ 6611)

# மரண அறிவித்தல்கள்

## கனகலிங்கம் அனிதா

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் அனிதா 24 - 02 - 99 நேற்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி கனகலிங்கம் (சிவபாதம்) — நேசரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், பாரதிதாசன், காயத்திரி, கோகிலவாணி, கோகிலதர்சினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சோ. மணிவண்ணன்**
(மாமா)

7 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(63407)

## சின்னையா நல்லையா
(மண்டைதீவு)

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னையா நல்லையா நேற்று முன்தினம் (23-02-99) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், யாதவகுலசிங்கம் (முன்னாள் தபாலதிபர், ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்), சாந்தகுலசிங்கம், குணநிதி, காலஞ்சென்ற குமாரகுலசிங்கம், யோகநிதி, இராஜகுலசிங்கம் (கொழும்பு), செல்வநிதி, விஜயசுந்தரம் (ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி) தெய்வநிதி, சிவகுலசிங்கம் ஆகியோரின் அன்புத்தந்தையும் வசந்தரூபன் (மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்), ஸ்ரீ பரமராஜா, சற்குணலிங்கம் (சிறுவர் பாதுகாப்பு நிதியம், யாழ்ப்பாணம்), சற்குணராணி (ஆட்பதிவுத் திணைக்களம், யாழ். செயலகம்), சகுந்தலாதேவி, சாரதாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் குகதர்சன், மனோதர்சினி, துவாரகா, துஷ்யந்தி, விஜயசாயி, அருணன், அஜந்தன், சுகன்யா, தினேசன், திவியன், துவாரகன், பிரவீணா, கீர்த்தனா லோஜிதா, குகன்யா, ஐங்கரி, சர்மிலன், பராஸ்கனி, யசிதரன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, யோகம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-2-99) வியாழன் பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**

17, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6615)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் [illegible] நூலகம்

# பதவி விலகப்போவதாக வாஜ்பாய் எச்சரிக்கை

புதுடில்லி, பெப். 25

பீஹார் மாநில அரசாங்கத்தைப் பதவி நீக்கம் செய்யும் தீர்மானத்துக்கு தமது கூட்டணிக் கட்சிகள் ஆதரவு தராவிட்டால் பதவி விலகப் போவதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாய் எச்சரித்துள்ளார்.

இந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்கு சில மணிநேரம் முன்பதாக அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

பிரதமரின் ராஜினாமா அச்சுறுத்தலை அடுதது தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பது என காங்கிரஸ் கட்சி தீர்மானித்துள்ளது.

பீஹார் விவகாரத்தால் பாரதீய ஜனதாக்கட்சி அரசு கவிழும் நிலை ஏற்பட்டால் மாற்று ஆட்சி அமைக்க காங்கிரஸ் தயாராக இருப்பதாக அக்கட்சியின் தலைவி சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக பீஹாரில் ஜனாதிபதி ஆட்சி அமுல் செய்யப்படுவதைத் தாங்கள் ஒரு போதும் ஆதரிக்கப்போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

பீஹார் ஆட்சிக் கலைப்புத் தொடர்பான பிரேரணை மீதான வாக்களிப்பு நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் நடைபெற இருந்தது. [க]

# வாஜ்பாயை மணம் முடிக்க விரும்பும் பெண் எழுத்தாளர்!

## காஷ்மீர் அதற்கு நிபந்தனை

லாகூர், பெப். 25

பகை கொண்டுள்ள இரு தரப்பினர் இடையே மீண்டும் உறவு தழைக்க மண உறவுகள் வழிவகுப்பது வரலாற்று உண்மை. அது போல பாகிஸ்தான் நாவலாசிரியை ஒருவர் பிரதமர் வாஜ்பாயை திருமணம் செய்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மீது தணியாத ஆசை கொண்டுள்ள இவர் இதற்கு விதித்துள்ள நிபந்தனை என்ன தெரியுமா? 'காஷ்மீர் பிரச்சினைக்கு பாகிஸ்தான் நிலைப்படி தீர்வு காண வேண்டும்' என்பதாகும்.

37 வயதான நாவலாசிரியை அதித்தா சம்ஷத் 74 வயதான பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தானுடன் உறவு மேம்படவும் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் முயற்சித்ததால் அவரை விரும்புகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1992 ஆம் ஆண்டு வேதியியல் துறையில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்ற நான் தற்போது புதிய உறவை உருவாக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் பாகிஸ்தானின் கொள்கைப்படி காஷ்மீர் பிரச்சினைக்கு வாஜ்பாய் தீர்வு காண வேண்டும் என்று நாவலாசிரியை கூறியுள்ளதாக உருது நாளிதழ் ''ஜங்'' செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ-10)

# இந்தியநாடாளுமன்றத்துள் திடீரென வந்த பூனைகள்!

## ஆட்சிக்கு அபசகுனம்?

புதுடில்லி, பெப். 25

இந்திய நாடாளுமன்றத்துக்குள் கடந்த திங்களன்று திடீரென இரண்டு பூனைகள் காணப்பட்டன.

நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பமாக இருந்த சமயம் பிரதமரின் இருக்கை அருகே இந்தப் பூனைகள் காணப்பட்டன. அதிகாரிகள் மிகுந்த சிரமப்பட்டு அந்தப்பூனைகளைவிரட்டியபோதும் சிறிது நேரம் காணாமற்போன அவை மீண்டும் அதே இடத்தில் தென்பட்டன.

பிஹாரில் முதல்வர் ராப்ரிதேவி தலைமையிலான அரசைக் கலைத்தது தொடர்பான பிரேரணை மீதான வாக்கெடுப்பு இந்திய நாடாளுமன்றில் நடைபெறும் வேளையில் வாஜ்பாய் அரசு கவிழ்ந்துவிடும் என எதிர்க்கட்சிகள் கூறிவருகின்றன.

பூனைகளை அபசகுனமாகக் கருதும் இந்தியர்கள் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பமாகும் வேளை பூனைகள் காணப்பட்ட சம்பவம் பாரதீய ஜனதா அரசுக்கு அபசகுனம் எனக் கருதுவதாகச் செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

''அரசாங்கத்தின் விதிக்குக் குறுக்கே பூனை பாய்ந்துள்ளது. என்ன நடக்கப் போகிறது என்பது எனக்கு வியப்பாக உள்ளது'' என்று நாடாளுமன்ற உறுப்பினர் லலு பிரசாத் யாதவ் தெரிவித்துள்ளார்.

(ஐ-க

# தாஜ்மஹாலைப் பார்க்க இரவிலும் இனி அனுமதி

ஆக்ரா, பெப். 25

தாஜ்மஹாலின் அழகை இனி இரவிலும் கண்டு களிக்க அனுமதி தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தாஜ்மஹால் திருவிழாவைக் கடந்த வியாழக்கிழமை மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி தொடக்கி வைத்தார்.

அப்போது இத்தகவலை அவர் தெரிவித்தார்.

பத்துநாள்கள் இந்தத் திருவிழா நடைபெறும்.

தாஜ்மஹாலுக்கு இரவு நேரத்திலும் பார்வையாளர்களை அனுமதிக்க சில பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். இந்த ஏற்பாடுகளை உத்தரப் பிரதேச அரசு செய்து முடித்தபின் உரிய அறிவிப்பு வெளியாகும் என்றார் அத்வானி.

தாஜ்மஹாலுக்குள் இரவு நேரத்திலும் பார்வையாளர்களை அனுமதிக்கத் தடையில்லாத மின்சாரவசதி, போதிய மின் விளக்குகள், மோப்ப நாய்கள் உட்பட பல்வேறு வசதிகளை வழங்கவேண்டும் என உள்துறை அமைச்சகக் குழு பரிந்துரைத்துள்ளது.

(ஐ-க-10)

### இந்திய--பாகிஸ்தான்

# லாகூர் உடன்படிக்கை; கிளின்ரன் வரவேற்பு

வாஷிங்ரன், பெப். 25

நீண்ட காலமாக நிலவி வரும் பதற்றத்தைக் குறைக்கும் முயற்சியாக இந்திய - பாகிஸ்தானிய பிரதமர்கள் சந்தித்துக் கொண்டதை, அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் பாராட்டியுள்ளார்.

வெள்ளை மாளிகையினால் இது தொடர்பாக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையில் நீண்ட காலமாக நிலவிவரும் முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆலோசனை செய்வதற்காக ஒன்றிணைந்து செயற்பட இரு தலைவர்களும் காட்டிய துணிவையும் வழிகாட்டுதலையும் தான் பாராட்டுவதாக அதிபர் கிளின்ரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவும், பாகிஸ்தானும் அளித்துள்ள வாக்குறுதிகள் உறுதியான செயல்திட்டங்களாக மாற்றப்படுமானால் தென் ஆசியாவும், முழு உலகும் குறிப்பிடத்தக்க விதத்தில் நன்மை அடையும் எனவும் கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்தும் இந்திய- பாகிஸ்தானின் முயற்சிக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவி வழங்கும் எனவும் ஜனாதிபதி கிளின்ரன் மேலும் தெரிவித்தார்.

(ஐ-10)

# எதியோப்பிய விமானங்கள் எரித்திரியா மீது தாக்குதல்

## சமாதான முயற்சிகள் தோல்வி

அடிஸ் அபாபா, பெப். 25

எரித்திரியா மீது எதியோப்பியா மீண்டும் விமானத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.

எரித்திரியாவின் அஸாப் துறைமுகத்துக்கு அருகில் உள்ள விமான நிலையம்

**உலக அரங்கில்**

மொன்றேஎதியோப்பியாவின் தாக்குதலுக்கு இலக்கானது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த நிலைமைகளைத் நிறுத்தி யுத்த நிறுதம் ஒன்றை மேற் கொள்வதற்காக கடந்த வாரம் ஐ. நா. பிரதிநிதிகள் இருநாடுகளுக்கும் விஜயம் செய்தனர். அவர்களது முயற்சி தோல்வியடைந்து அந்த நாடுகளிலிருந்து அவர்கள் வெளியேறியதன் பின்னரே தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

அஸாப் விமான நிலையமானது மிகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்துள்ளது.

இந்த விமான நிலையம் மீதான தாக்குதலே எதியோப்பியாவின் முதலாவது தாக்குதல் எனக் கூறப்படுகின்றது.

எரித்திரியா வசமிருக்கும் 'மிக்' விமானங்கள் அஸாப் விமான நிலையத்தின் ஓடு பாதைகளைப் பாவிப்பதைத் தடுக்கும் நோக்கிலேயே மேற்படி தாக்குதலை எதியோப்பியா நடத்தியது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-க-10)

## குற்றச்சாட்டு

தேசத்திற்குத் துரோகம் இழைத்தமை மற்றும் நாட்டை பிளவுப் படுத்த முற்பட்டமை போன்ற குற்றச் சாட்டுக்கள்து நக்கிய குர்திஷ் கெரில்லா தலைவர் ஒகலன் மீது சுமத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் துருக்கிய நீதிபதி ஒருவரினால் இக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப் பட்டன.

தலைநகர் இஸ்தான் புல்லுக்கு தெற்கே மர்மரா கடலுக்கு அருகே உள்ள தீவு ஒன்றில் பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்படாத நீதிமன்றில் ஒகலன் ஆஜர் செய்யப்பட்டார்.

(ஐ-க)

# ஷியா முஸ்லிம்கள் நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்ட செய்திக்கு ஈராக் மறுப்பு

ஷியா முஸ்லிம் தலைவரின் படுகொலையை அடுத்து பக்தாத்தில் பரவலாக கலவரம் ஏற்பட்டதையும் அதில் நூற்றுக்கணக்கான ஷியாப் பிரிவினர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுவதையும் ஈராக் வன்மையாக மறுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று ஷியாக்களின் மூத்த தலைவரான ஆயத்துல்லாஹ் முஹம்மத் சாதிக் ல்- சதா மற்றும் அவரது இரு புதல்வர்களும் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஷியா பிரிவினர் பரந்தளவில் பக்தாத்திலும் புறநகர்ப் பகுதிகளிலும் கலவரத்தை ஏற்படுத்தியதாகச் செய்தி அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்த கலவரங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட சதாம் ஹுசேய்னின்குடியரசுப்படையினர் நூற்றுக்கணக்கான ஷியா ஆர்ப்பாட்டக்காரர்களைக் கொன்றதாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

ஆனால் பக்தாத் மற்றும் தென்பகுதி நகரங்களான ஹில்லா, கர்பலா, நஸீஸிய்யா ஆகிய இடங்களில் கலவரம் ஏற்பட்டதாகக் கூறப் படுவதையும் ஷியாக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுவதையும் ஈராக் முற்றாக மறுத்துள்ளது.

''ஈராக்கில் கலவரம் இடம் பெற்றதாகக் கூறுவது வெறும் கற்பனையே, இது எவ்வித ஆதாரமும் அற்ற செய்தியாகும்'' என ஈராக் செய்தி நிறுவனத்தின் பணிப்பாளர் உதே அல்தா அறிவித்துள்ளார்.

ஆனால் ஈரானின் தலைநகர் தெஹ்ரானிலுள்ள இஸ்லாமிய புரட்சிக்கான உயர் சபை பக்தாத்தில் மாத்திரம் சுமார் 300 ஷியாக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவித்துள்ளது. (ஐ)

# ருஷ்டியின் வருகைக்கு முஸ்லிம்கள் ஆட்சேபம்!

புதுடில்லி, பெப். 25

சர்ச்சைக்குரிய பிரிட்டிஷ் எழுத்தாளர் சல்மான் ருஷ்டியின் விசாவை இரத்துச் செய்யுமாறு இந்தியாவில் உள்ள பல்வேறு முஸ்லிம் அமைப்புக்கள் ஜனாதிபதி கே. ஆர். நாரயணனை மகஜர் ஒன்றின் மூலம் கேட்டுள்ளன.

ருஷ்டியின் பயணத்தால் நாட்டில் சட்டம், ஒழுங்குகளை மீறும் செயல்கள் இடம்பெறும் எனவும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை—

சல்மான் ருஷ்டி இந்தியா வருவதனால் இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையிலான உறவில் விரிசல் எதுவும் ஏற்படமாட்டாது என ஈரான் தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரஜை ஒருவருக்கே விசா வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசியல் விடயம் எதுவும் சம்பந்தப்படவில்லை என புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

'சாத்தானின் கவிதைகள்' நூலை எழுதியதன் மூலம் நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தினார்என்று ருஷ்டி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தெரிந்ததே.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புளோர் பொலிஷர், றைஸ் குக்கர், பெடெஸ்ரல் பான், மின்சாரக்கேத்தில், மோட்டர் 2000 கி. வோ. பீங்கான் கோப்பைகள், கம்பளம் மற்றும் வீட்டுத் தளபாடங்களும் ஏனைய பொருள்களு : தொடர்பு: 39/1, இராசாவின் தோட்ட வீதி, (வைரவர் கோயில் ஒழுங்கை) யாழ்ப்பாணம். தினமும் பி. ப. 3.00 மணிக்குப் பின்னர் பார்வையிடலாம். (63357)

வீணை, ஆர்மோனியம் (Single Reed) சுருதிப்பெட்டி ஆகிய இசைக்கருவிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.S. ரஜீந்திரன் 23, குறோசற் லேன், சுண்டுக்குளி. (63385)

நல்ல நிலையில் இருக்கும் பாண் பேக்கறி உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 39, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். (63392)

கடைக்குரிய பெரிய, சிறிய அலுமாரிகள், சோக்கேஸ், தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ராஜன், 393, பஸ்தியன் சந்தி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (63394)

## தவறிவிட்டது

வியாபாரி மூலை வீதி அல்வாயைச் சேர்ந்த தவயோகநாதன் ரமணன் என்பவரின் விசேட அடையாள அட்டை, பிரிகேட் பாஸ் என்பன 10 - 02 - 99 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 077-212365 இலக்க (திருத்தணி) தொலைபேசி நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும். [63368]

ரயில்வீதி கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை இராசையா என்பவரது தேசிய அ. அட்டை (இல. 161650420V), விசேட அடையாள அட்டை என்பன 20 - 02 - 99 அன்று மருதனார்மடச்சந்தையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நந்தாவில் அம்மன் கோயிலில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். [63375]

## ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சனைகளுக்கும் ஆலோசனை வழங்கப்படும். சாதகத்துடன் வரவும். புதன் கிழமையில் 111/3, கோயில் வீதி, நல்லூரிலும், ஞாயிறு முழுநேரமும் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம். [63358]

## விவாக சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களை விருப்பப்படி தேர்ந்தெடுக்க மாவை விநாயகர் விவாக சேவை. 111/3 கோயில் வீதி, நல்லூரில் புதன் கிழமையும், மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்தில் ஞாயிறுகளிலும் சந்திக்கலாம். (63359)

## விற்பனையாளர் தேவை

பஞ்சுமிட்டாய் சைக்கிளில் கொண்டு சென்று விற்பதற்கான ஆள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: 15/2, நல்லூர், யாழ்ப்பாணம். (63386)

## ஆங்கிலம்

Spoken English 40 மணித்தியாலங்களில், G. A. Q. பட்டப்படிப்புப் பரீட்சையிலும் O/L பரீட்சையிலும் Distinction, Credit பெறுபேறுடைய கற்பிக்கப்படும். B. Sc Londen Inter ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (63371)

## காணவில்லை

5 வயதுடைய அல்சேசன் நாயைக் காணவில்லை. தயவு செய்து கண்டவர்கள் பின்வரும் முகவரிக்கு தெரியப்படுத்தவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். செல்வா, 41/6, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். [63383]

## இலகு திருமண சேவை

1967 சதயம் கிரகபாவம் குறைந்த நகைத்தொழிலில் ஈடுபாடுடைய சுவிஸ் மணமகனுக்கு மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில். உள்நாட்டு வெளிநாட்டு மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறுகளில் து. விமலா, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (63393)

---

அளவெட்டி வடக்கு தவளக்கிரி
முந்துமாரி அம்மன் கோயில்

# விசேட பொதுக் கூட்டம்

28 - 02 - 1999

மேற்படி ஆலய உபயகாரர்கள், அடியார்கள் கொண்ட விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 28. 02. 99 முற்பகல் 9 30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற உள்ளதால் உபயகாரர்கள், அடியார்கள் அனைவரும் தவறாது சமுகம் தந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

க. சின்னத்தம்பி
தலைவர், பரிபாலனசபை.

(சி/6605)

---

# ஓவியப் போட்டி

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் ஓவியப் போட்டியொன்று தனிப்பட்டவர்களுக்கு நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகள் மாகாண மட்டத்தில் மட்டும் நடைபெறும். ஓவியத்திற்கான தலைப்பு ''21 ஆம் நூற்றாண்டில் மக்கள் வாழ்வில் கணனி'' என்பது அமையும். ஓவியர்கள் இதனைக் கருத்திற் கொண்டு 45 செ. மீ -30 செ. மீ அளவான காகிதத் தாளில் வரைய வேண்டும். வோட்டர்க்கலர் (நீர்வர்ணம்) பெஸ்ரல், சாயத்தூள் என்பன உபயோகிக்கலாம். போட்டியில் மூன்று பரிசுகள் வழங்கப்படும். முதற் பரிசு பெறுபவருக்கு விருதும், சான்றிதழும், 2 ஆம் 3 ஆம் பரிசு பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்.

வரையப்பட்ட ஓவியங்கள் எதிர்வரும் சித்திரை மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர்,

திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்,
உதவிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள்,
கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு,
திருகோணமலை.

என முகவரியிட்டு தபாலில் அனுப்பி வைக்கவும்.

சுந்தரம் டிவகலாலா,
செயலாளர்,

(சி/6609)

---

# நீங்காத நினைவில்
# இரண்டாம் ஆண்டு

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 26 — 12 — 1935 |  | 17 — 02 — 1997 |

திருமதி

## இராமலிங்கம் பரமேஸ்வரி

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

திதி: 25 - 02 - 1999

அன்பின் திருவுருவாய் எம்முடன் கலந்திருந்து
அணையாத ஒளி விளக்காய் ஒளி வீசினீர்கள்
நீங்கள் மறைந்து ஈராண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது!

கணவன் இராமலிங்கம்,
பேரமக்கள், பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி தெற்கு,
சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி.

(63386)

---


ALL PURPOSE MULTI DIRECTIONAL

# KOBE-52

TV/RADIO ANTENNA



பொருத்துவதற்கு இலகுவானது

- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junction,
Colombo 4. Tel : 589992

AVAILABLE ISLANDWIDE

(சி/6492)


---

# நன்றி நவிலல்

## வேலுப்பிள்ளை தியாகராசா

19 - 02 - 99 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த வேலுப்பிள்ளை தியாகராசா அவர்களின் இறுதிக் கிரியைகளில் அன்றைய தினம் கொட்டிய மழையையும் பொருட்படுத்தாமல் நேரில் கலந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும் அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்தில் சலிக்காது சிகிச்சை அளித்த வைத்தியப் பெருமக்களுக்கும் இறுதிக் கிரியைகளில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும்எமதுமனம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

ச. ஜெயரத்தினம் (ஜெயம்),
விஜயன் ரான்ஸ்போட் சேவிஸ்,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

[63397]

---

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.

# VACANCIES

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 15 - 03 - 1999 for the undermentioned posts.

FACULTY OF SCIENCE

| | SALARY SCALE |
|---|---|
| 01. Temporary Assistant Lecturer in<br>Botany<br>Chemistry<br>Computer Science<br>Mathematics & statistics<br>Physics<br>Zoology | RS. 8075. 00 p. m. |
| 02. Temporary Demonstrator in<br>Botany<br>Chemistry<br>Physics<br>Zoology | RS. 7225. 00 p. m. |
| 03. Tempo.ary Instructor in<br>Mathematics & Statistics<br>Computer Science<br>Computer Unit | RS. 7225. 00 p. m. |

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar / Establishment (Academjc), University of Jaffna, Sri Lanka either in persnn or by sending a Money Order for Rs. 20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna togethar with a self addressed stamped envelope 23X10 cm in size.

Applicants from the University System / Government Department / Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applicatioas raceived after the closing date will be rejected without intimation.

REGISTRAR

University of Jaffna.
Jaffna.
1999 - 02 - 16.

( C/6607 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த பெரும் போகச் செய்கைக்கு விதை நெல் தட்டுப்பாடு ஏற்படும்

## விவசாயப் பணிப்பாளர் சொல்கிறார்

யாழ்ப்பாணம். பெப். 25 கடந்த வருட இறுதியிலும், இந்த வருட ஆரம்பத்திலும் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக குடாநாட்டின் நெற்பயிர்ச்செய்கை முற்றாகவே பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே அடுத்த போக நெற்பயிர்ச் செய்கைக்கு விதை நெல்லுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என யாழ். மாவட்ட விவசாய உதவிப்பணிப்பாளர் (விரிவாக்கம்) த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக வயல்களில் பெரும் வெள்ளம் தேங்கியுள்ளது.

இதனால் அறுவடைக்குத் தயாராக விருந்த நெற்கதிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக தென்மராட்சிப் பகுதியில் 40 சதவீதமான வயல்களிலேயே நெல் அறுவடை இடம் பெற்றுள்ளது. 60 சதவீதமான வயல்களில் வெள்ளம் தேங்கியுள்ளதால் அறுவடை இடம்பெறவில்லை.

பல சிரமங்களின் மத்தியிலும் அறுவடை செய்யப்பட்ட நெல்லின் தரம் குறைந்தே காணப்படுகின்றது. அது மட்டுமன்றி அவை நீண்ட காலத்துக்கு சேமித்து வைக்கக் கூடிய நிலையிலும் இல்லை.

எனவே அடுத்த போக பயிர்ச் செய்கைக்குத் தேவையான விதை நெல்லை வேறிடங்களில் இருந்தே இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-7)

# தென்னிந்தியத் திருச்சபை வன்னி மக்களுக்கு நிதி

வலி.தென்மேற்கு, பெப். 25 இடம்பெயர்ந்து வன்னியில் வாழும் மக்களுக்கு உதவ தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். திருமண்டலம் 9 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

தென்னிந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி. எஸ். ஜெபநேசன் இதனைத் தெரிவித்தார்.

சென்ற வருடம் வழங்கப்பட்ட இந் நிதி வன்னி மக்களின் நிவாரண விநியோகத்திற்குப் பயன்படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-185)

# இதய பூர்வ நன்றிகள்

18 ஆம் திகதி வியாழக்கிழமை நடந்த எமது புத்திரர்களின் உபநயனத்தில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும், இந்த உபநயனத்தை நடத்தி வைத்த

தீட்ஷா குரு
பிரம்மஸ்ரீ ச மகேஸ்வரக் குருக்களுக்கும்

இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்த சகல அந்தணப் பெருந்தகைகளுக்கும், மங்கள இசை பொழிந்த சகல வித்துவான்களுக்கும், அன்பளிப்பு வழங்கிய பெருந்தகைகளுக்கும், பத்திரிகை மூலம் வாழ்த்துக்கள் தெரிவித்தவர்களுக்கும், இந்த வைபவத்தைச் சிறப்பித்து எல்லா வழிகளிலும் உதவிய அனைவருக்கும், பந்தல் அலங்காரம் செய்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு. எல்லாம் வல்ல மகாகணபதிப் பிள்ளையார், இராஜஇராஜேஸ்வரிதேவியின் அருள் கடாட்சம் கிடைக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

நன்றிகள்!

இங்ஙனம்
ச. சிறீஜயா

கோண்டாவில் மேற்கு.

(63372)

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் பிறந்தது 02 — 06 — 1952

எம்மை விட்டுப் பிரிந்தது 16 — 02 — 1997

## அமரர் கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(கிராம உத்தியோகத்தர், பளை)

திதி — தசமி 25 — 02 — 1999

பாசமுள்ள எங்கள் அன்புச் செல்வமே! நேரிலே பார்க்க முடியாத நிலையில் நிழற்படத்தில் பார்த்துப் பரிதவிக்கும் எங்களை யார் தேற்றுவது? ஈராண்டு சென்றாலும் உங்கள் அன்பு வார்த்தைகளும், பண்பான குணமும் அளப்பரிய சேவைகளும் எங்கள் நெஞ்சை விட்டகலாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கும்

மனைவி, பிள்ளைகள், தாய்,
உறவினர்கள், நண்பர்கள்.

திருமதி ப. பத்மநாதன்,
பளை நகரம்,
பளை.

(63381)

# திறப்பு விழா

வலி கிழக்கு. பெப். 25 கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி இந்துமாமன்றத்தினரால் அமைக்கப்பட்ட பிரார்த்தனை மண்டப முன் முகப்பு திறப்பு விழா கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது.

மண்டப முன் முகப்பு ஓவியத்தினை பிரம்மஸ்ரீ தானேஸ்வரக் குருக்கள் திறந்து வைத்தார். அந்த ஓவியத்தினைச் சிறப்பாக வரைந்த கந்தையா குணசேசரனுக்கு 'ஓவியச்செல்வன்' என்ற கௌரவப்பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்தி இந்துமாமன்றத்தினர் கௌரவித்தனர்.

(ஐ-180)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 — 06 — 1940

மறைவு 07 — 03 — 1998

திருமதி
## பொன்னம்மா இளையதம்பி

திதி : 1999 — 02 — 25

அன்பு ததும்பும் முகம் கண்டு ஆறிரு
திங்கள் ஆனதம்மா
என்புத் தசையும் தந்துலகில் — எமை
வாழ வைத்தாய் தெய்வமே!
பண்பும் பரிவும் பாசமும் ஒருங்கே
தங்க [ம்] மனங்கொண்ட தயாபரியே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சர்வோதய வீதி,
ஆவரங்கால்,
புத்தூர்.

[63254]

# மாதம் ஒரு தடவை சந்திக்க வாய்ப்பு

செம்பியன்பற்று. பெப். 25 வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் ஒவ்வொரு மாதமும் முதற் திங்கட் கிழமைகளில் வீடமைப்பு உத்தியோகத்தரைப் பொது மக்கள் சந்திக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-35)


# பாராட்டு விழா

வடமராட்சி, பெப். 25 நாகர்கோயில் பிறப்பு இறப்புப் பதிவாளர் ஆ. நவரத்தினசாமி சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதைக் கௌரவிக்கும் பாராட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை நாகர் கோயில் மகாவித்தியாலயத்தில் க. ஆனந்தமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் பி.ஈஸ்வரதர்சன் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி. பி. வேலாயுதம்பிள்ளை, நிர்வாக உத்தியோகத்தர் இ. சிவபுண்ணியம், உதவி திட்டப் பணிப்பாளர் க. ஈஸ்[illegible] விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

(ஐ - 173)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



வேலணை மேற்கு சிற்பனையைச் சேர்ந்த

## ஸ்ரீஸ்கந்தராஜா தர்சன்

(யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் கணிதப்பிரிவு 1996)

அன்னை மடியில் 08 - 06 - 1977

ஆண்டவன் அடியில் 16 - 02 - 1997

திதி: 25 - 02 - 1999

உந்தன் தந்தையை இழந்த வேளை
தஞ்சமென்றிருந்தோம் எந்தன் தர்சனே!
வந்தது விதியோ வஞ்சகன் காலன் தந்த
வைத்தியனறியா நோயோ!
கந்தா! சிற்பனை முருகா! சுகந்தாவென
தந்திரமறியா உன் தங்கைகள் வேண்டி நிற்க
சிந்தை கலங்கிய சித்தப்பாமார் பாதக நோயைக்
கண்டு பதைத்துச் சோர
வெந்துயர் கொண்ட மாமன்மார் காலனை
வென்றெழுந்திடுவானென்றெண்ண
இந்துவின் நண்பர்கள் கணிதத்தில் வித்தை காட்ட
வந்திடுவானென்று கணிக்க
வந்த வினை மாயாது பொருந்துவன போகாது
என்பதை உணரவைத்துச் சென்றனையோ?
மைந்தா! நொந்து நூறாயிரமாண்டு கழிந்தழுது
ஓய்ந்தாலுமுன் நினைவு மாறாது!

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்புத்தாய், அருமைச்சகோதரிகள்,
அப்பம்மா. சித்தப்பாமார், சித்திமார், மாமன்மார், மாமிமார்,
வளர்த்த அப்பம்மா திருமதி. ப. கைலாசபிள்ளை,
அன்பு மாமா த. ஸ்ரீதரன்.

114, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(63391)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 ஆவது ஆண்டு நிறைவு விழா

அறவழிப் போராட்டக் குழுவின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று
25 - 02 - 1999 ஆம் திகதி வியாழன்
காலை 10.30 மணிக்கு
கைதடி நுணாவிலில் உள்ள செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தலைவர்:
திருமிகு. வீ. ஜீ தங்கவேல் அவர்கள்
(தலைவர், அறவழிப் போராட்டக் குழு)

பிரதம விருந்தினர்:
கவிஞர். சோ. பத்மநாதன் அவர்கள்
(அதிபர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

"சமுதாய சீர்திருத்தம்"
பற்றி பிரதம விருந்தினர் உரையாற்றுவார்.
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

**NVDAG** அறவழிப் போராட்டக் குழு

(63303)

---

விநாயகர் துணை

இமையாணன் துவாளி
அருளோங்கு
## விநாயகர் ஆலயம்
உடுப்பிட்டி
## சித்திரத் தேர்
# வெள்ளோட்ட விழா

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் **மாசிமாதம் பதினான்காம் நாள் (26-02-99) வெள்ளிக் கிழமையும்** புனர்பூச நட்சத்திரமும் ஏகாதசித் திதியும் சித்தயோகமும் கூடிய பகல் 1-00 மணி முதல் 3-00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நவீன முறையில் புனரமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இனிது நடைபெற எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருள் கூடியுள்ளது. எனவே காணற்கரிய இவ்விழாவில் அனைவரும் கலந்து இறையருள் பெற்று உய்யும் வண்ணம் அழைக்கின்றோம்.

சித்திரத்தேர் புனர்நிர்மாணிப்பு:
**தேவரத சிற்பி விஸ்வப்பிரம்மஸ்ரீ
செல்லையா பாலச்சந்திரனும் குழுவினரும்
காளிகா சிற்பாலயம், புத்தூர்.**

நன்றி!

இவ்வண்ணம்:
ஆனைமுகன் அருள்வழி நிற்கும்
ஆலய பரிபாலன சபையாரும்,
தேர்த் திருப்பணிக் குழுவினரும்.

இமையாணன்,
துவாளி.

(63373)

---

# யாழ். மாவட்டத்திற்குப் பொருள்களைக் கப்பலில் அனுப்புவோர் கவனத்திற்கு

1. கொழும்பில் கப்பலில் பொருள்களை ஏற்றியதும், அதற்குரிய B/L FINAL பிரதியை உடனடியாக யாழ். செயலக புனர்வாழ்வுக்கிளையில் சமர்ப்பிக்கவேண்டும்.
2. பொதிகள் இங்குவந்து சேருமளவும் சேதம் ஏற்படாதவாறு நன்றாகப் பொதிசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு பொதியிலும் தெளிவாக அடையாளமிடப்படல் வேண்டும்.
4. **பெறுமதிமிக்க பொருள்கள் கப்பல் தலைமை அதிகாரியிடம் கையளிக்கப்பட்டிருப்பதுடன், பொருள்களைக் கையளித்ததற்கான பத்திரத்தின் பிரதியையும் யாழ். செயலக புனர்வாழ்வுப்பகுதியில் சமர்ப்பித்தல் வேண்டும், (இவ்விதிப்படி கப்பலில் இதனைச் சமர்ப்பித்தால், அதன்படி கப்பல் தலைமை அதிகாரியிடம் பொருள்களைக் கேட்டுப் பெற முடியும்)**
5. பொருள்களை ஏற்றும்போது பொருள்களைக் கலந்து ஏற்றாது B/L ஒழுங்கின்படி ஏற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை ஓரளவுக்காவது மேற்கொள்ள வேண்டும.
6. பொதிகள், பொருள்களை இலகுவாக அடையாளங்காண ஏதுவாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை பொருள்களைத் தருவிப்போர் அனைவரும் கடைப்பிடித்தால், பொருள்களை சேதமில்லாது கையளிக்க இலகுவாக இருக்கும் என்பதைத், தெரிவித்துக்கொள்கின்றேன்.

**- அரச அதிபர்**

யாழ். செயலகம்.
22-02-1999.

(சி/6595)

---

## ஹோமியோபதி வைத்தியர் பதிவு

யாழ்ப்பாணம், பெப். 25

ஹோமியோபதி வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தங்களைப் பதிவு செய்ய விரும்பும் ஹோமியோபதி வைத்தியர்கள் 'கொழும்பு-10, த. பெ. இல: 579' இல் உள்ள ஹோமியோபதி கவுன்ஸிலில் இருந்து விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து அனுப்பலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(க)

## புலோலியில் திருட்டுக்கள்

வடமராட்சி, பெப். 25

புலோலிப் பகுதியில் அண்மைக்காலமாகத் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன.

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள இரவு வேளைகளில் ஆட்கள் இல்லாத வீடுகளின் ஓடுகள், ஜன்னல்கள், கதவுகள், மரங்கள் என்பனவே இவ்வாறு திருடப்பட்டு வருகின்றன.

இது சம்பந்தமாக பருத்தித்துறை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-173)

## தொலைபேசி வசதி இல்லை

சண்டிலிப்பாய், பெப் 25

பண்டத்தரிப்பு பட்டினப் பகுதியில் 'ரெலிகொம்' நிறுவனத்தின் தொலைத் தொடர்பு தொலை பேசிச் சேவை எதுவும் ஏற்படுத்தப் படவில்லை.

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கமும் மற்றும் தனிப்பட்டவர்களும் தொலைபேசி இணைப்புக்கோரி விண்ணப்பித்து நீண்ட காலமாகியும் இதுவரை இணைப்பு வழங்கப்படவில்லை.

(ஐ-135)

---

## மயிலிட்டி காணிக்கை மாதா திருநாள்

திருநாள் பாடற் பூசை
நாள்: 28 - 02 - 99 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 10.30 (புதிய நேரம்)

காணிக்கை அன்னையின் ஆசீர்வாதத்தைப் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தெல்லிப்பழையூடாகவும், சேந்தாங்குளம் ஊடாகவும் பக்தர்கள் வழிபாட்டிற்கு வர ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

பங்குத் தந்தையும்,
பங்கு மக்களும்.

காணிக்கை மாதா ஆலயம்,
மயிலிட்டி.

(633 ?)

---

## விற்பனைக்கு

சுன்னாகம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் வீதியில் கிழக்குப் பக்கமாக பழைய பொலிஸ் ஸ்ரேசன் ஒழுங்கையில் 250 யார் தூரத்தில் வீடு அமைக்கக் கூடிய 13 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு;-

சேது விபுலானந்தா,


SARAA SETHU SERVICES
சரா சேது சேவிஸஸ்
விப ஒபிற் சேவிஸஸ்
VIPA ORBIT SERVICES

207, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

(சி-6583)

---

# சேவை நலன் பாராட்டு



யா/ உடுத்துறை மகாவித்தியாலய அதிபர்
## திரு. பொன்னையா சங்கரப்பிள்ளை
S L. P S. - GRADE II

சேவை விவரம்

| பாடசாலை | திகதி | பதவி |
|---|---|---|
| யா/ உடுத்துறை ம. வி. | 06-01-60—31-12-63 | ஆங்கில உதவி ஆசிரியர் |
| வதுளை/ சரஸ்வதி ம. வி. | 01-01-64—30-06-69 | உதவி ஆசிரியர் |
| அ/ கலாவெவ முஸ்லிம் ம. வி. | 01-07-69—31-12-69 | உதவி ஆசிரியர் |
| அ/ அனுராதபுரம் விவேகானந்தா ம. வி. | 01-01-70—31-01-71 | உதவி ஆசிரியர் |
| யா/உடுத்துறை ம. வி. | 01-02-71—14-01-75 | உதவி ஆசிரியர் |
| மு/ உடையார்கட்டு ம. வி. | 15-01-75—23-08-83 | அதிபர் |
| யா/ மருதங்கேணி இந்து வி. | 24-08-83—17-01-94 | அதிபர் |
| யா/ உடுத்துறை ம. வி. | 18-01-94—30-06-98 | அதிபர் |

கல்வி உலகில் 39 ஆண்டுகள் ஆசிரியராகவும், அதிபராகவும் சேவையாற்றி 1991 ஒக்ரோபர் 6 இல் நடைபெற்ற உலக ஆசிரியர் தினத்தில் கல்வித் திணைக்களத்தால் சிறந்த அதிபராகப் பாராட்டைப் பெற்று அண்மையில் ஓய்வுபெற்ற எங்கள் அதிபரின் அரும்பெரும் சேவையைப் பாராட்டி அவரும் அவரது குடும்பத்தினரும் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

உடுத்துறை வாழ் மக்கள்.

(63377)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இப்போதும் பிந்தவில்லை

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் இன்று வியாழக்கிழமை சந்தித்துப் பேச உள்ளனர்.

ஜனவரி மாதம் நடைபெற்ற வடமேல் மாகாண சபைத்தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் பரம வைரிகளாகச் செயற்பட்டும் முழங்கியும் வந்த இருதலைவர்களும் இன்று சந்திப்பது என்பது ஒரு திருப்பமே.

வட மேல் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர், பிரசார காலத்தில். நடைபெற்ற வன்செயல்களே ஜனநாயக விரோதத் தேர்தல்ஒன்றேநடைபெறப் போகின்றது என்பதற்குக் கட்டியம் கூறின. தேர்தல் நாளன்று நடைபெற்ற காடைத்தனமும் தேர்தல் வன்முறைகளும் தெற்கில் ஜனநாயகம் புதைகுழிக்குள் மூடப்பட்டுவிட்டது என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளன!

தேர்தல் வன்முறைகளில் மிகப் பெரிய அளவில் ஆளுந்தரப்பினரே ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டை அமைச்சர்களும் அவர்களின் 'வால்பிடி'களும் முன்னர் ஆக்ரோசத்துடன் மறுத்தனர். குற்றஞ்சாட்டியவர்களை — தேர்தல் கண்காணிப்புக் குழுவினர்கள் உட்பட — வாயில் வந்தவாறு எல்லாம் வைதனர்.

எனினும் உண்மையை ஆரவாரம் செய்யாமல் ஒப்புக்கொள்ளும் நிலைக்கு வந்து, ஏப்ரல் மாதம் நடைபெற ஏற்பாடாகியுள்ள மற்றும் ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தலின் போதாவது ஜனநாயகத்துக்குப் பாதுகாப்பு அளிப்போம் என்று அரசதரப்பினர் இப்போது ஒலிக்கத் தொடங்கி உள்ளனர்.

அதன் எதிரொலியே, எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு அனுப்பியதும் இன்றைய சந்திப்பும்.

ஏப்ரலில் நடைபெறவுள்ள தேர்தல்களை நீதியான முறையிலும் சட்டத்துக்கு உட்பட்டும் நடத்துவதற்கான வழிவகைகளை ஆராய்வதே இன்றைய சந்திப்பின் பிரதானநோக்கம்.

தேர்தல்களை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றி, அதன் வழி வரும் அதிகாரங்களை அனுபவிப்பதிலேயே தென்னிலங்கை அரசியல்வாதிகளின் ஆசை தீவிரமாகியுள்ளது.

நாட்டிற்குப் பெரும் அழிவுகளைத் தந்து கொண்டிருக்கும் போரை நிறுத்துவதிலோ, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலோ அவர்களுக்குக் கரிசனை இல்லை!

அது குறித்து ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் நேரில் சந்தித்துப் பேசியிருந்தால் —

நாட்டு நலன் கருதித் தங்களுக்கிடையில் உள்ள அரசியல்பேதத்தை மறந்து கருத்து வேற்றுமைகளை நீக்கியிருந்தால் —

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி மறந்து போன விடயமாகக் கருகி இராது. தேர்தல்களைச் சீராக நடத்துவதற்காக சந்திரிகாவும் ரணிலும் சந்தித்துப் பேச முடியும் என்றால், இனப் பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக ஏன் சந்தித்திருக்க முடியாது? இப்போதும் பிந்தவில்லை. கரிசனை கொள்வார்களா?

# குடாக்கடல்வழியேஇதுவரை 37 ஆயிரம் பேர் வருகை

யாழ்ப்பாணம். பெப்,25 யாழ்.கடல் நீரேரி ஊடாக வன்னிப் பகுதியிலிருந்து இது வரையும் 13 ஆயிரத்து 580 குடும்பங்களைச் சேர்ந்த 36 ஆயிரத்து 873 பேர் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

1997 மார்ச் 10 ஆம் திகதி தொடக்கம் 1998 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையுமே மேற் குறிப்பிட்ட தொகையினர் வன்னியிலிருந்து திரும்பியுள்ளனர்.

இவர்கள் குருநகர் நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்ட பின்னரே தமது இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஐ-5)

## கமநல திணைக்களத்துக்கு நெல்வெட்டு இயந்திரங்கள்

வலி. கிழக்கு, பெப். 25 யாழ். மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்திற்கு 'குமண' கப்பலில் நெல் வெட்டும் இயந்திரங்களும், உரவகைகளும் வந்து சேர்ந்துள்ளன.

இக்கப்பலில் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கென 500 மெற்றிக்தொன் யூரியாவும் 250 மெற்றிக்தொன் அமோனியாவும் எடுத்து வரப்பட்டு கமநல கேந்திர நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று நெல் வெட்டும் இயந்திரங்களும் மேற்படி கமநல சேவை திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இதே வேளை—

காலம் தாழ்த்தி உரவகைகள் வந்து சேர்ந்துள்ளதால் விவசாயிகளுக்கு அதனால் உரிய பயன் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-180)

## இணைப்பு

யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்திற்குத் தொலைபேசி இணைப்பை யாழ் ரெலிகொம் நிறுவனம் வழங்கியுள்ளது. [ஐ-17]

## புனரமைப்பு

கோப்பாய் வடக்கில் அமைந்துள்ள ஸ்ரீசபாவதி நாவலர் சனசமூக நிலையம் புனரமைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களின் காரணமாக சேதமுற்றிருந்த இச் சனசமூக நிலையத்திற்கு கோப்பாய் பிரதேச சபை நிதியை வழங்கியது. (ஐ-72)

## ஆண்டு விழா

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் நிறுவப்பட்டு 125 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு மூன்று நாள்களுக்கு விசேட நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான கூட்டம் ஒன்று கடந்த வாரம் வித்தியாலய அதிபர் சி. ஆ. சோதிலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதில் மாணவர்களின் பெற்றோர் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினர். வித்தியாலய அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(ஐ-7-30)

# குடாநாட்டு நெற்செய்கையாளருக்கு இவ்வருடத்தில் பேரிடர் தந்த மழை

என்றுமில்லாதவாறு விவசாய நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பேரிடரை ஏற்படுத்தியது இவ்வருடமே ஆகும். தேவையான வேளையில் போதிய மழை பெய்யாமல் தேவையில்லாத நேரத்தில் பெருமளவு வந்து விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டது.

மாவட்ட மட்டத்தில் இவ்வருடம் விவசாயிகள் நல்லின நெல் விதைகளைத் தேடி எடுத்து ஆரம்பத்தில் விதைந்த போதும் கடும் வரட்சியினால் விவசாயிகளது நெல் மணிகள் சுடு புளுதியில் கிடந்து [நீண்ட நாள்களாக] முளைதிறன் அற்றநிலையில் அழிவு ஏற்பட்டது.

பின்னர் அனேகமான விவசாயிகள் மீண்டும் நிலத்தைப் பண்படுத்தி பலவகைச்செலவுகளைச் செய்து மீண்டும் விதைத்தனர். பின்னர் அடுத்தும் பெய்த மழையினால் ''முளை வெள்ளம்'' போட்டு நெற்செய்கையாளர்களுக்கு நஷ்டத்தையும் மன உளைச்சலையும் கொடுத்தது; பெரும் பணச் செலவையும் தந்தது.

எனினும் மிகுதியாகதப்பிப் பிழைத்த நெற்செய்கைக்கு விவசாயிகள் ஓரளவு பூச்சி நாசினிகளையும், யூரியா, அமோனியா மற்றும் உரவகைகளையும் அவை தட்டுப்பாடான வேளையிலும் கூடியளவு பணம் செலுத்தி இட்டதால் விவசாயம் ஓரளவு பயன் தரும் என்று நம்பி இருந்தனர்.

பெரும்போகம் நல்லதோர் அறுவடை இல்லாமல் ஓரளவு அறுவடைக்குத் தயாராக இருந்த வேளையில் மூன்று நாள்களாக அண்மையில் பெய்த மழையினால் தப்பிப் பிழைத்த நெல்மணிகள் மீண்டும் வெள்ளத்தில் அமிழ்ந்து போனதால் அழிவை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் விவசாயிகளின் ஜீவனோபாயம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது: இவ் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்துப் பலவாறாக ஆராயப்பட்டதே அன்றி அவர்களுக்கு உதவ எந்த அமைப்பும் முன்வரவில்லை.

விவசாய சம்மேளனங்கள் பிரதேச செயலர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஊடாக விவசாய நெற்செய்கையாளர்களது ''பலவடிவ'' பிரச்சினைகள் யாழ். அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதனை அடுத்து அதனை நடைமுறைப்படுத்த அதாவது நஷ்டஈடு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சமூக சேவைகள் அமைச்சின் அங்கீகாரத்துடன் நஷ்டஈட்டுப் படிவங்கள் தற்போது கிராம அலுவலர்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன. இதன் விளைவைப் பொறுத்து இருந்து தான் பார்க்க வேண்டும். ★

— விவசாயி

## உண்மையும் நேர்மையும் நிறைந்தபத்திரிகையாளன்

### இலக்கிய வட்டம் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 25 பத்திரிகையாளனுக்கு வேண்டப்படும் நேர்மையும் உண்மையும் அமரர் கா. யோகநாதனிடம் ஒருங்கே அமைந்திருந்தன. அடக்கமாக இருந்து எழுத வல்லவராகவும் அவர் திகழ்ந்தார்.

இவ்வாறு யாழ். இலக்கிய வட்டம் மூத்த பத்திரிகையாளர் கா. யோகநாதனின் மறைவு குறித்து வெளியிட்ட இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழநாடு ஆரம்ப காலத்திலிருந்தே அமரர் கா. யோகநாதன் காரியாலயச் செய்தியாளராகப் பணியாற்றினார்.

அரசியல் செய்திகள், சமூக, பொருளாதாரச் செய்திகளை எவ்வித சலசலப்புமின்றி அடக்கமாக இருந்து எழுதுவதில் வல்லவர்.

செய்தி வேட்டைச் செலத்துரைக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு செய்திகளை வாசகர் படித்து மகிழும் வண்ணம் எழுதி 'ஈழநாடு' பத்திரிகையின் வளர்ச்சிக்கு ஆதாரசுருதியாக விளங்கியவர் கா. யோகநாதன்,

ஞாயிறுவாரமலர் ஆசிரியராக விளங்கிய போது பழைய, புதிய, எழுத்தாளர்களை அவர் நேரில் சந்தித்து அவர்களது ஆக்கங்களை வெளியிட்டு உதவினார்.

பத்திரிகையாளனுக்குரிய நேர்மை, உண்மை அவரிடம் காணப்பட்டதுடன் அவனுக்குரிய பொறுப்பையும் நன்குணர்ந்து செயற்பட்ட செயல் வீரர் கா. யோகநாதன்.

சிறந்த மூத்த, பத்திரிகையாளரான கா யோகநாதனின் மறைவு பத்திரிகைத் துறைக்கும் அவரது நெருங்கிய நண்பர்களுக்கும் பேரிழப்பாகும் — என்று உள்ளது.

(அ)



## சாயி சிந்தனை

பாத பூஜையோ, வடிவ பூஜையோ அன்றி வேறெந்த பூஜையாக இருந்தாலும் இதய பூர்வமாகச் செய்ய வேண்டும். நீயார்? நீ மனிதன்! The Proper study of mankind is man இதயம், தலை, கரம் இம் மூன்றின் ஒருங்கிணைப்பே அவசியம். ஸ்ரீசத்திய சாயி நிறுவனங்களில் Ehv என்ற பெயரில் மாணவர்களுக்கு மனித உயர் குண நலன்கள் போதிக்கப்படுகின்றன. ஆனால் ஸ்வாமி சொல்வது Ehv அல்ல 3HV 3H- Heart. Head, Hand இம் மூன்றின் உயர்குண நலன்கள் தான் ஒருங்கிணைப்புத்தா[illegible]

(ஆதாரம்:- [illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

மாசி 14

வெள்ளிக்கிழமை

திதி: ஏகாதசி
பிற்பகல் 3. 30 வரை.
நட்சத்திரம்: புனர்பூசம்
வைகறை: 5.14 வரை.
ஏகாதசி விரதம்

சுபநேரம்: 6.29 - 7.59
ராகுகாலம்: 10.59 - 12 29
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தவக்காலச் சிந்தனை - 9

வாழ்க்கை என்ற வண்டி ஓடுவதற்கு முயற்சி என்ற அச்சாணியே மூல காரணமாகும். சோம்பித் திரிபவன் வாழ்வில் சுதந்திரம் இருக்காது. அடுத்தவரிடம் இரந்தே பிழைப்பான். இவனுடைய வாழ்வு விடிவில்லாதது.

இயேசு சொல்கின்றார்! ''கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்'' அப்போது உங்களுக்கு அருளப்படும். நல்லவற்றைக் கேளுங்கள், தேடுங்கள், அன்பில்லா உள்ளங்களைத் தட்டுங்கள் உங்கள் முயற்சிக்குப் பலன் கிடைக்கும்.

எனவே ''பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புவற்றை எல்லாம் அவர்களுக்குச் செய்யுங்கள்'' [மத். 7:12] அப்போது தீச்செயல் என்பதற்கு இடமிருக்காது. பிறரன்பு வளம் பெற்ற சமுதாயம் வளர்ந்து வர வழி பிறக்கும். அடுத்தவரைக் கெடுக்கவோ, கோட்டில் ஏற்றவோ நேரமிருக்காது. உழுவெடுத்த சமுதாய ஊறுகளை எல்லாம் களைந்து நற் சமுதாயம் படைக்க முன் வருவோம்; நாளைய சந்ததியினர் நலமாய் வாழ வழி சமைப்போம்.

— அன்ரனி பீற்றர்

## விவசாயக் கருத்தரங்கு

சண்டிலிப்பாய், பெப். 25 மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் ஆதரவில் மரமுந்திரிகைச் செய்கை பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி திங்கட்கிழமையன்று நடைபெறவுள்ளது.

சம்மேளன அலுவலகத்தில் சம்மேளனத் தலைவர் கி. பொ. [illegible]மா. க முதலியார் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் [illegible] அஞ்சனாதேவி, தி. [illegible]தா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். வீட்டுக்கு ஒரு கன்று வீதம் மரமுந்திரிகைக் கன்றும் வழங்கப்படவுள்ளது.

[ஐ-135]

### உதய வாக்கு

பலவீனமே உலகத்திலுள்ள எல்லாத் துன்பங்களுக்கும் வேர்

—ஜோன்ஸன்

# கோப்பாய்ப் பிரதேசத்துக்கு மின்சாரம் கிடைக்கவில்லை

கோப்பாய், பெப். 25

கோப்பாய்ப் பகுதிக்கு சுழற்சி முறையிலான மின்சாரமோ அல்லது 24 மணி நேர மின்சாரமோ இதுவரை வழங்கப்படவில்லை. இது குறித்து இப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர்.

குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்படுகின்ற போதும் யாழ். நகருக்கு அண்மையில் உள்ள கோப்பாய்ப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

இங்கு அரசினர் வைத்திய சாலை, பிரதேச செயலகம், வங்கி உட்பட மற்றும் பல அரச அலுவலகங்கள் இப்பிரதேசத்தில் அமைந்துள்ளன. அத்துடன் பெரும் எண்ணிக்கையான விவசாயிகளும் இப்பிரதேசத்தில் வசிக்கின்றனர். ஆனால் இப்பகுதிக்கு மின் வழங்க முன்னுரிமை அளிக்கப்படாததால் அரச அலுவலகங்களும், மக்களும் பல சிரமங்களை அனுபவிக்க வேண்டி உள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் இப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மின் இணைப்பு வேலைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

(ஐ-72)

## கோட்டைக்காடு பகுதியில் புதிய தேவாலயம் திறப்பு

வலி. தென்மேற்கு, பெப். 25

கோட்டைக்காடு 'சமாதானக் கோட்டை'யில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினர் புதிய தேவாலயம் ஒன்றினை அமைத்துள்ளனர்.

ஏழு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இத் தேவாலயத்தைஇன்றுவியாழக்கிழமை கல்லூரிஅதிபர்ஜி இராஜநாயகம், வட்டுக்கோட்டை பேராலய பேராயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி எஸ். ஜெபநேசனிடம் கையளிப்பார்.

இந்நிகழ்வில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விசேட 'பான்ட்' வாத்தியக் குழுவினர் திருமதி எஸ். வி ஜெபநேசன் தலைமையில் விசேட பாடல்களை இசைப்பர்.

ஆலயதிறப்பு விழாவினைத் தொடர்ந்து பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்து வைப்பார்.

இதில் கல்லூரி பிரதி அதிபர் வண. ஏ. ஏ. போல், சகோதரர் யோசுவா, இடைநிலை மேற்பார்வையாளர் என்.ஏ. விமலேந்திரன், மேற்பார்வையாளர் அன்னப்பா ஜெயராஜன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-185)

## வெளிக்கள ஆய்வு நிலையம் இயங்குகிறது

வடமராட்சி, பெப். 25

தொண்டமானாறு வெளிக்கள ஆய்வு நிலையம் தற்போது இருபாலையில் முன்னர் யாழ் கல்விவலயம் இரண்டின் அலுவலகம்இருந்த கட்டடத்தில் — இயங்க ஆரம்பித்துள்ளது.

இந் நிலையம் கடந்த பல வருடங்களாகப் பல்வேறு இடங்களில் இடம் பெயர்ந்து செயற்பட்டு வந்தது.

(ஐ-173)

### சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கத்துக்கு

# மூலிகைத் தோட்டம் அமைப்பதற்கு இதுவரை நிதி வழங்கப்படவில்லை

திருநெல்வேலி, பெப். 25

யாழ். சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் இணுவில் கிராமத்தில் பத்துப் பரப்புக் காணியில் சித்த ஆயுர்வேத மூலிகைத் தோட்டம ஒன்றை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருந்ததுஎன்றும் அதற்கான நிதி உதவி எதுவும் இதுவரை சங்கத்திற்குக் கிடைக்காத காரணத்தால் மூலிகைத் தோட்டத்தை ஆரம்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இச் சங்கம் கடந்த 1998 ஆம் ஆண்டில் மேற்படிகாணியில் மூலிகைத் தோட்டத்தை நிறுவுவதற்கான கருத் திட்டம்ஒன்றைத்தயாரித்துஇதற்கென 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதிஉதவி வழங்குமாறு கூட்டுக் கூட்டுறவத் திணைக்களம் ஊடாக மகஜர் ஒன்றைத் திருகோணமலையிலுள்ள வடக்கு-கிழக்கு மாகாணசுதேச வைத்தியத்துறை பணிப்பாளருக்கு அனுப்பி வைத்திருந்தது. ஆனால் இது பற்றி எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லைஎன்றும், நிதி எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என் ம் சங்கத்தின் தலைவர் நா. கணேசன் கவலை தெரிவித்தார்.

இதேவேளை —

கொக்குவில் கிழக்கில் தற்போது இயங்கிவரும் இச் சங்கம் வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினதும், சமாசத்தினதும் நிதி உதவியுடன் தமிழர்களின் பாரம்பரிய வைத்தியமான சித்த ஆயுர்வேத வைத்தியத்திற்குத் தேவையான மருந்துவகைகளைத் தயாரித்து வருகின்றது.

இருமல், சளி நோய்களுக்கு பயன்படுத்தப்படும் 'ஆடாதோடைப் பாணி' மருந்து நீரிழிவு (சலரோகம்)நோய்க்குப் பயன்படுத்தப்பட்டு வரும் 'மதுமேகசூரணம்' ஆகிய மருந்துகள் உட்பட மற்றும் பல சித்த ஆயுர்வேத மருந்துகளையும், எண்ணெய்களையும் சங்க மருந்து உற்பத்தித் தொழிலகத்தில் தயாரித்து விநியோகம் செய்து வருகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் நடத்தும் இலவச சித்த யுர்வேத வைத்திய சாலைகளுக்கும், சித்த ஆயுர்வேத மருத்துவர்களுக்கும் இந்த மருந்து வகைகள விநியோகம் செய்யப்படுகின்றன.

(ஐ-135)

### வட்டு. கார்த்திகேயன்

## பாடசாலைக் கட்டட வேலைகள் பூர்த்தி

யாழ்ப்பாணம். பெப். 25

வட்டுக்கோட்டை கார்த்திகேயன் வித்தியாசாலை புதிய கட்டட நிர்மாண வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இந்த வித்தியாசாலை முற்றிலும் சேதமடைந்து இயங்க முடியாத நிலையில இருந்து வந்தது.

இப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள பெற்றோர், ஆசிரியர்களின் முயற்சியினால் சேதமடைந்த பாடசாலையைபுதிதாகநிர்மாணிக்கும் பணி ஆரம்பமானது.

5 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இப் பாடசாலைக்கான கட்டடப் புனரமைப்புச் செலவில் 5 இலட்சம் ரூபாவை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வழங்கியது.

மிகுதி 75 ஆயிரம் ரூபாவும் அப்பகுதி மக்களிடம் இருந்து சூலிக்கப்பட்டு செலவிடப்பட்டது.

இப் பாடசாலை வெகு விரைவில் திறந்து வைக்கப்பட உள்ளது.

(ஐ 15

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேங்காய் விநியோகம்

அரியாலை, பெப். 25

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பளைப் பகுதியில் இருந்து 2 ஆயிரத்து 55 தேங்காய்களைத் தருவித்துள்ளது.

தருவிக்கப்பட்ட தேங்காய்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு 44 ரூபா விலையில் சமாசம் விநியோகித்து வருகின்றது.

இதேசமயம்—

யாழ். நகரப் பகுதியில் தேங்காய்க்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

நடுத்தரத்தில் இருந்து பெரிய அளவிலான தேங்காய் ஒன்று 45 ரூபா முதல் 65 ரூபா வரை விற்கப்படுகின்றது.

தேங்காய் விலை அதிகரிப்பினால் தேங்காயின் பாவனையைப் பாவனையாளர்கள் குறைத்துள்ளனர்.

சிலர் பால்மா வகைகளையும்சமையலுக்குப் பாவிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-17)

## மைதானம் அமைக்க முயற்சி

வலி. தென்மேற்கு, பெப் 25

நவாலியில் அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டுக் கழகத்திற்கு மைதானம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கான ஏற்பாட்டை நவாலி தெற்கு கிராம அலுவலர் [illegible] மேற்கொண்டுள்ளார்.

(ஐ-185)



## பிற்போடப்பட்டுள்ளது

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் மாசிமாதம் 24, 25, 26 ஆந் திகதிகளில் இலங்கை மின்சார சபையில் நடத்தப்படவிருந்த நேர்முகப்பரீட்சைகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பொ. இராமநாதன்,
மாகாண முகாமையாளர்.
தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை,
இல. 7, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(63398)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
வலி. மேற்குப் பிரிவு
ஷ பிரிவின் நீண்டகால நிர்வாக சபை உறுப்பினரான
திரு. து. வாமதேவன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி
துரைச்சாமி அம்பிகை
அவர்கள் காலமானதையறிந்து ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கௌரவ செயலாளர்,
இ. செ. சி. சங்கம், வலிமேற்குப் பிரிவு.
(63399)

## விற்பனைக்கு

எமது சங்கத்தில் பின்வரும் விவரப்படி
நாம்பன் கன்றுகள் இரண்டு; ஆட்டுக்கடா ஒன்று விற்பனைக்குண்டு.

நல்லின ஜேசி (கலப்பினம்) வயது 12½ மாதம்
நல்லின ஜேசி (கலப்பினம்) வயது 13 மாதம்
நல்லின சாணன் (கடா) வயது 14 மாதம்

தேவையானவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிட்டு ஒவ்வொன்றுக்கும் உரிய கூறுவிலையை **27-02-99** ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும். ஒவ்வொன்றுக்கும் விலை தனித்தனியாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு கோப்பாய்.

(சி/ 6608)

## ஆளுநர் விருது வழங்கல்

வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்டு வரும் ஆளுநர் விருது இவ்வருடமும் வழங்கப்படவிருக்கின்றது. இதற்கான சிபார்சுகளை பொதுமக்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம். பின்வரும் அடிப்படையிலேயே ஆளுநர் விருதுக்கான தெரிவு இதற்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் தீர்மானிக்கப்படும்.

அ) விருது பெறுபவர், அவர் சார்ந்த துறையில், செய்த சேவையின் காரணமாக அத்துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆ) கலை, இலக்கிய, மொழி வளர்ச்சி ஆகிய துறைக்கே இவ்விருது வழங்கப்படும்.

இ) வடக்கு - கிழக்கு பிரதேசத்தை தனது பிறப்பிடமாகவோ, வாழ்விடமாகவோ கொண்டிருப்பவராக இருத்தல் வேண்டும்.

ஈ) சிபார்சு செய்பவர், சிபார்சு செய்யப்படுவர் பற்றி சிபார்சு செய்யப்படுவதற்கான காரணத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுதல் அவசியம்.

உ) சிபார்சுகள் யாவும் ஏப்ரல் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

முகவரி:
திரு. எஸ். எதிர்மன்னசிங்கம்
உதவிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள்,
கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு — கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

சுந்தரம் டிவகலாலா,
செயலாளர்.
(சி/6610)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## JAFFNA DISTRICT
## Basket ball Association

The Results of the Raffle drawn at Jaffna Central College.

| Prizes | No. |
|---|---|
| 1. First Prize | 2010 |
| 2. Second Prize | 6685 |
| 3. Third Prize | 3335 |

Consolation Prizes

| | | | |
|---|---|---|---|
| 1 4583 | 2. 5505 | 3. 301 | 4 3157 |
| 5 9764 | 6. 7865 | 7 3103 | 8 8126 |
| 9. 1422 | 10 6766 | | |

The lucky ones are requested to collect their prizes on or before the 10 th March 1999 from the Treasurer.
Mr. A F. T. Alfred
167, Nayanmar Veethy, Nallur.

We thank all of those who helped and encouraged us in numerous ways.

Raffle Committee
( J. D B. A. )

(63411)

## செங்கற்கட்டிகள் தேவை

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருப்பணி வேலைகளுக்கு செங்கற்கட்டிகள தேவைப் படுகின்றன. வைத்திருப்போர் விலை விவரங்களுடன் ஆலயப் பணிமனையில் தொடர்புகொள்ளவும்.

இ. இராசலிங்கம்,
செயலாளர்,
நிர்வாக சபையும்,
திருப்பணிச் சபையும்.

(63409)

## யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

### 1999 ஆம் ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

எமது யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் 1999 ஆம் ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் 27 - 02 - 99 சனிக்கிழமை பி. ப. 2. 00 மணிக்கு (புதிய நேரம்) ஜும்மாப் பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள ''சிற்றி ஹோல்'' மண்டபத்தில் (மலாயன் பென்ஷனியஸ் கட்டடம்) நடைபெறும். சகல அங்கத்துவ வர்த்தகப் பெருமக்களும் தங்களின் ஸ்தாபனங்களை பகல் 12. 30 மணிக்கு மூடி இக் கூட்டத்தில் பங்கு பற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

இல. 27, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/6613)

## தீவக அரிமாக் கழக அங்குரார்ப்பணம்

### INAUGURATION OF LIONS CLUB OF KAYTS
(Theevagam)

இடம்: யாழ். மத்திய கல்லூரி
திகதி: 28-02-1999 காலை 10.00 மணி

பிரதம விருந்தினர்:
லயன் K. V. முத்துக்குமாரசுவாமி
(லயன்ஸ் மாவட்ட இணைப்பாளர்)

சிறப்பு விருந்தினர்கள்:
லயன் A. தங்கேஸ்வரன்
(லயன்ஸ் பிராந்திய இணைப்பாளர்)
லயன் Dr. S. S. அருளானந்தம்
(லயன்ஸ் பிராந்தியத் தலைவர்)

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்படும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு சகல லயன்ஸ் குடும்பத்தினரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
யாழ். லயன்ஸ் கழகம்

விளம்பர அன்பளிப்பு:
**சாரங்கா நகை மாடம்**
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளைகள்:
அருள்முருகன் நகை அகம்
யாழ்ப்பாணம்.
சிவா நகை மாடம்
சாவகச்சேரி.

(சி/6612)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 25

தீவக வலயப் பாடசாலைகளுக்கான பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு வேம்படி மகளிர்கல்லூரியில் நடைபெறும்.

ஏற்கனவே விண்ணப்பங்களை அனுப்பி அனுமதி அட்டைகள் கிடைக்காத ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தியுள்ள விண்ணப்பதாரிகள் அன்றையதினம் பரீட்சை நிலையத்துக்கு வருமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

(இ-3)

## சிந்தனை நாள் விழா

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். மாவட்ட சாரணீய சிந்தனை நாள் விழாவும், சாரணீய ஸ்தாபசர் பேடன் பவல் தினவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 30 மணி முதல் பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலய கதிரவேற்பிள்ளை மண்டபத்தில் செல்வி ஸ்ரீ சிவதர்ஷினி தலைமையில் நடைபெறும்.

(இ-3)

## இடமாற்றம் பெறும் ஆசிரியர்களுக்கு கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 25

கோணடாவில் பாஞ்சோதி வித்தியாலயத்தில் நீண்டகாலம் பணிபுரிந்து இடமாற்றம் பெற்றுச்செல்லும் மூன்று ஆசிரியர்கள் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

கௌரவிப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு பாடசாலை அதிபர் சு. சண்முககுமார் தலைமையில் நடைபெறவுள்ளது இந்தவிழாவில் யாழ்ப்பாணக கல்வி வலயப் பணிப்பாளர் கலாநிதி ச நா. தணிகாசலம்பிள்ளை பிரதம விருந்தினராகக கலந்துகொண்டு ஆசிரியர்களுக்கு தங்கப் பதக்கங்களை வழங்குவார்.

இடமாற்றம் பெற்றுச் செல்லும் திருமதி ஈ. நாகரத்தினம், சி. கதிரவேலு, வே. குமரகுரு ஆகிய ஆசிரியர்களே கௌரவிக்கப்படவுள்ளனர்.

(இ-6)

## தேசிய ஆங்கில சான்றிதழ் பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 25

தேசிய ஆங்கில சான்றிதழ் பரீட்சை பகுதி ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(இ-3-51)

## வல்வைநகரசபைக்கு புதிய கட்டடம்

வடமராட்சி, பெப். 25

வல்வெட்டித்துறை நகர சபைக்கென 60 இலட்சம் ரூபா செலவில் புதிய அலுவலகக்கட்டடம் ஒன்று கட்டப்படவுள்ளது.

வல்வெட்டித்துறை தொண்டமானாறு வீதியில் ஏற்கனவே அலுவலகம் இருந்த இடத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

புதிய கட்டடம் அமைப்பதற்கு வசதியாக வல்வை நகர சபையின் அலுவலகம் வல்வெட்டித்துறை பருத்தித்துறை வீதியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றுக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

### தொண்டர் ஆசிரியர்களுக்கான
## பொதுக் கூட்டம்

இடம்:- D. M. I. கல்வி நிலையம்
ஆரியகுளம் சந்தி.

காலம்:- 26 02-99 வெள்ளி காலை 10. 00 மணி

அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொண்டர் ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணம்.

(63402)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவனத்தின் பொருளியல் ஆசிரியர்
திரு. விஜயசுந்தரம் அவர்களின்
அருமைத் தந்தையார்

**சின்னையா நல்லையா**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

● எமது நிறுவன (A/L) மாணவர்களை இன்று காலை 7 மணிக்கு அன்னாரின் இல்லத்துக்குச் செல்வதற்காக நிறுவனத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
வேலணை. மணி கல்விநிறுவனம்

(63412)

## இதய அஞ்சலி

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் அமைப்பாளரும் முன்னாள் தலைவருமான
திரு. ந. விஜயசுந்தரம்
(ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி)
அவர்களின் தந்தையார்
அமரர்

**சின்னையா நல்லையா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முன்னாள் நிர்வாகிகள்
யாழ் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்.

(63408)

## இதய அஞ்சலி

**சின்னையா நல்லையா**
(மண்டைதீவு)

அமுதசுரபி கலாமன்ற அங்கத்தவர்
திரு ந. விஜயசுந்தரம்
(ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி)

அவர்களின் அன்புத் தந்தை சின்னையா நல்லையா அவர்கள் இறைபதம் எய்திய செய்தி அறிந்து, ஆழ்ந்த கவலையுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து இதய அஞ்சலி செலுத்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கை
அமுதசுரபி கலாமன்றத்தினர்.

யாழ்ப்பாணம்.

(சி/6616)

## M&E Trainees for UNDP / JRRP

We are looking for trainees in monitoring and evaluation of projects. Graduates conversant in English with an analytical mind, willing to travel and eager to meet and interact with people will be trained by outside experts and gain project experience in Jaffna. Women candidates are encouraged to apply.

**Please submit your CV to UNDP/JRRP**
**125, Temple Road, Nallur.**

Closing date 5 th March 1999.

(63401)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரு ஆட்டங்கள் நாளை பிற்பகல் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3-30 மணி — றோயல் வி. க. அணி எதிர் பொற்பதி வி. க. அணி.

★ பிற்பகல் 4-45 மணி — பாடும்மீன் வி க அணி எதிர் சென். அன்ரனீஸ் வி.க.அணி.

★ ★ ★

மதிவதனன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1-45 மணிமுதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ ஜொலிஸ்ரார் வி. க. எதிர் பற்றீசியன்ஸ் வி. க.

★ கே. ஸி. ஸி. ஸி. வி. க. அணி எதிர் ஜொனியன்ஸ் வி. க. (இ-3)

## நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்)

வும்—

இதனால் பாதிக்கப்படும் மக்களுக்கு நீதியான தீர்வு எதனையும் நீதிமன்றங்களினால் வழங்க முடியாது என்றும்—

செம்மணிப் புதைகுழி விவகாரத்திலும் நீதிமன்றங்களினால் நீதியான தீர்வு எதனையும் காணமுடியாது என்றும்—

நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

செம்மணிப் புதைகுழி விடயம் சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களின் நேரடிப் பொறுப்பின் கீழ் சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் விசாரணைசெய்யப்படுவதையே விடுதலைப் புலிகள் விரும்புவதாகவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த விவகாரம் குறித்து இன்று நீதிமன்றங்களில் ஆராயப்பட இருப்பதாகவும் நீதிமன்ற வட்டாரங்களில் இருந்து அறிய முடிந்தது.

# கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் பாடசாலை மட்டத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கென நடத்தப்பட்டு வரும் ''முரண்பாடுகளைதீர்த்தல்'' தொடர்பான கருத்தரங்கு இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணமாநகரசபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகவும் யாழ். இந்துக்கல்லூரி அதிபர் கே. சிறிக்குமரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா, தேசிய கல்வி நிறுவகவிரிவுரையாளர் தனலக்ஷ்மி வில்வநாதன் மகளிர் அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் புஸ்பா சின்னையா, சேவைக் காலஆலோசகர் பாலாம்பிகை சுப்ரமணியம் ஆகியோர் இந்த நிகழ்வில் கருத்துரை வழங்குவார்கள். (இ-6)

# இல்லமெய்வல்லுநர் போட்டிகள்

கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப. 1. 30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலய அதிபர் க. மயில்வாகனம் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் தென்மராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் இ. கைலைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து பரிசில்களை வழங்குவார்.

(ஐ-74-102)

★ ★ ★

வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் செ. சிவலிங்கராசா தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ச. நா. தணிகாசலம்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர் சு. முத்துக்குமாரசாமி, இளைப்பாறிய உப அதிபர்களான ச. குமாரசாமி, மா. தங்கத்துரை ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-72)

# சேதமடைந்த ஆலயங்கள் விவரம் சேகரிப்பு

சூளாய், பெப். 25

வன்செயல் காரணமாகச் சேதமடைந்த வணக்கஸ்தலங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் பற்றிய விவரங்கள் பிரதேச ரீதியாகத் திரட்டப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் பல வணக்கஸ்தலங்கள் கடந்தகால வன்செயல் காரணமாகச் சேதமடைந்துள்ளன. ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியாகவும் இவ்வாறான அனைத்து மதங்களையும் சார்ந்த வணக்க ஸ்தலங்களின் விவரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

சேகரிக்கப்படும் விவரங்களின் அடிப்படையில் அவற்றைப் புனரமைப்பதற்கான நிதியுதவிகள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ஈ. பி. டி. பி....

[முதலாம் பக்கத் தொடர்]

ருவியுள்ள தீயசக்திகளை இனங்கண்டு அத்தீயசக்திகளுக்கு இடமளிக்க வேண்டாம் எனக் கேட்டிருந்தோம்.

பசுத்தோல் போர்த்த புலிகளின் பசப்பு வார்த்தைகளை நம்பி பேசா மடந்தைகளாக இருந்ததன் விளைவு தான் இனறு தொடரும் மர்மக் கொலைகள் மற்றும் ஆள் கடத்தல்கள் என்பன.

மக்களே...! இதனைத் தொடரவிட்டால் இக் கொலைகாரர்களினால் நாளை உங்கள் கதவும் தட்டப்படலாம் சிந்தியுங்கள் விரைந்து செயற்படுங்கள் — என்றுள்ளது, (இ-6)

## யாழ். மர்மக்...

[முதலாம் பக்கத் தொடர்]

ஒன்று நேற்றைய னம் (23 ஆம் திகதி) யாழ். நகரில் பொதுமக்களின் பார்வைக்கென வீசி எறியப்பட்டிருந்தது.

சில வாரங்களுக்கு முன்னர் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் ''பிரபாகரனின் பிணந்தின்னிப் பேய்களுக்கு இது ஒரு பாடம்'' என்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்த அட்டையுடன் வீதியோரத்தில் காணப்பட்டது.

இந்தச் சம்பவங்களின் சூத்திரதாரியான ஒரு தமிழ் அரசியல் இயக்கம் செயற்படுவதாக எமக்குத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

புலிகள் இயக்கத்தினால் சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தப்பட்ட அரசியல் படுகொலை ஒன்றுக்குப் பதிலடியாகவே இத்தகைய படுகொலைச் சம்பவங்களில் இந்த இயக்கம் இறங்கியிருப்பதாக நாம் அறிகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் மர்மமாக காணாமல் போகும் இளைஞர்களின் விவகாரத்துக்கும் வீசி எறியப்படும் சடலங்களுக்கும் இடையில் உள்ள தொடர்பினை எவரும் ஊகித்து உணர முடியு .

இத்தகைய சம்பவங்கள் சமீப காலத்தில் வவுனியாவிலும் நிகழ்ந்துள்ளன. மொறட்டுவப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உட்பட எட்டுப் பொதுமக்கள் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளதாக கருதப்படும் சம்பவங்களையிட்டு சர்வதேச மன்னிப்புச் சபையும் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

''புலி வேட்டை'' என்ற பெயரில் கடத்தல்களும் சித்திரவதைகளும் கோரக் கொலைகளும் தொடர்ந்து கொண்டிருப்பதையும் ஜனநாயகம் பேசுவோரால் அவை நிகழ்த்தப்படுவதையும் எதிர்த்துக் குரல் கொடுக்க மனித உரிமைகளை மதிக்கும் சகல தரப்பினரும் முன்வர வேண்டும்.

இத்தகைய அராஜக நடவடிக்கைகளை அம்பலப்படுத்தவும் தடுத்து நிறுத்தவும் தமிழ் இனத்தின் நலன் நாடும் அனைவருக்கும் கடமை உள்ளது.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூட்டம்

வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை வலி. மேற்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-99)

## மனிதத் தலை...

(முதலாம் பக்கத் தொடர்)

மனைவியான செல்வலக்ஷ்மி (21 வயது) யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்தப் பெண் செய்த முறைப்பாடு தொடர்பாக தாம் விசாரணை நடத்தியதாகவும்—

அந்த இளைஞனின் புகைப்படம் ஒன்றைப் பெற்று ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்ட தலையுடன் ஒப்பிட்டுப் பார்த்ததாகவும்—

பின்னர் அந்த இளைஞனின் தந்தை நேரில் தலையைப் பார்த்து அது காணாமற்போன தனது மகனினுடையது என்று உறுதிப்படுத்தியதாகவும்—

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி சிறீதரன் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில்வைக்கப்பட்டுள்ள தலையை அடையாளம் காண்பதற்காக பிரஸ்தாப பெண் நெல்லியடிப் பொலீஸாரால் இன்று அழைத்து வரப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

• பிரஸ்தாப இளைஞன் யாழ். நகரில் உள்ள புடைவைக் கடை ஒன்றில் பணிபுரிந்து வந்தார் என்றும்—

கடந்த 20 ஆம் திகதி வடமராட்சிக்குச் செல்வதற்காக வல்லை சோதனை நிலையத்தில் அடையாள அட்டையை ஒப்படைத்து அனுமதிப்பாஸ் பெற்றுள்ளார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-3-15-139)

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

யம் தொடர்பாக ஏற்கனவே யாழ். நீதிமன்றத்தில் பொலீஸாரினால் மனுத் தாக்கல் செய்யப்பட்டு எதிர்வரும் 5 ஆம் திகதி இந்த விவகாரம் நீதிமன்றத்தில் மீண்டும் எடுக்கப்பட இருந்ததுதெரிந்ததே.

இந்த விசாரணையை ஒட்டி நீதிமன்றத்தின் பணிப்பின் பிரகாரம் மண்ணியல் துறை நிபுணர் பேராசிரியர் கே. ஏ. நந்தசேன, சட்ட மருத்துவத்துறைப் பேராசிரியர் நெரியல்லகே சந்திரசிறி, அரசாங்க பகுப்பாய்வாளர் எம். ஜே. மெண்டிஸ் ஆகியோர் விரைவில் யாழ்ப்பாணம் வர இருந்தனர்.

இலங்கை நீதித்துறை, இராணுவ நிர்வாகத்தின் நலன் கருதியும் இராணுவ அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு ஏற்ற முறையிலும் செயற்படுவதனால் செம்மணி விடயம் சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் விசாரிக்கப்பட வேண்டும் என்று புலிகள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும் தெரியவந்தது.

(இ-3)

# பௌர்ணமி தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப். 25

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் பௌர்ணமி தின பன்னிரு திருமுறைப் பாராயணமும், அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதலும் எதிர்வரும் 1 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயிலில் இடம் பெறவுள்ளன.

இதேதினம் வண்ணார் பண்ணை கலட்டி அருள்மிகு எச்சாட்டி மகா மாரிஅம்மன் கோயிலில் திருமுறைப் பாராயணம் இடம் பெறும்.

# ஜேர்மனியில் ஈழத்தமிழர் கொலை

கொழும்பு, பெப். 25

ஜேர்மனியில் உள்ள றெலிங்டன்நகரில் இலங்கைத் தமிழரொருவர்அடித்துக் கொல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கதிரன்குமாரவேல்(42வயது) என்பவரே இறந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவரது சடலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை விளையாட்டு மைதானமொன்றிற்கு அருகில் காணப்பட்டது.

## உதயன்...

(முதலாம் பக்கத் தொடர்)

உதயனில் எவ்வாறு வெளியானது என்பது குறித்து உதயன் ஆசிரிய பீட அலுவலர் ஒருவர் இரகசியப் பொலீஸாராலும் குற்றப் பொலீஸாரினாலும் நேற்றுக் காலை விசாரிக்கப்பட்டார்.

அதன் பின்னர் அவரிடம் இருந்து இரகசியப் பொலீஸார் வாக்குமூலமும் பெற்றுச் சென்றனர்.

(இ-3)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தின் போது கோரிக்கையை விடுத்தனர்.

'' ஜனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையில் நடைபெறும் சந்திப்பு இனப்பிரச்சினைத் தீர்வுக்கும் உதவவேண்டும். தற்போதைய முயற்சிகள் பயனற்றுப்போகமல் காப்பாற்றுவது அரசினதும் எதிர்கட்சியினரதும் கடமையாகும்'' என்று நீலன் திருச்செல்வம் பிரேரணையைச் சமர்ப்பித்துப்பேசினார்.

''பேச்சுவார்த்தைக்கு தயாராகவிருப்பதாக விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிவிப்பை அரசாங்கம் சாதகமாகப் பயன்படுத்தவேண்டும். நம்பிக்கையை உருவாக்கும் நடவடிக்கையில் அல்லது 3 ஆம் தரப்பு மத்தியஸ்த உடன்பாடு ஒன்றுக்கு அரசு இணங்கவேண்டும்'' என்று மற்றொரு கூட்டணி எம். பியான யோசப் பரராஜசிங்கம் குறிப்பிட்டார்.

''சமாதானப் பேச்சுக்கள் நிபந்தனையற்ற முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும்'' என்று புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் கோரினார்.

''நாட்டின் இரத்தக் களரியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசியல் சார்பற்ற தலைவர்கள் முன்வந்துள்ளமை முக்கிய விடயம்'' என்று ஈ. பி. டி. பி. அங்கத்தவர் எஸ். சிவதாசன் தெரிவித்தார்.

''முஸ்லிம் மக்கள் இந்த முயற்சியை வரவேற்கின்றனர்'' என்று ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் கூறினார்.

''இந்த சமாதான முயற்சி குறித்து அனைத்துக் கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும்'' என்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பியான நிலான் பெரேரா தெரிவித்தார்.

மற்றுக் கட்சி எம்.பிகளும் இதைப் பாராட்டிப் பேசினர். (இ-3-6)


# மரண அறிவித்தல்

## கந்தையா அன்னலக்சுமி

கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா அன்னலக்சுமி 24—02—1999 அதிகாலை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை தங்கம்மாவின் அன்பு மகளும் ஒய்வு பெற்ற அதிபர் கந்தையாவின் அன்பு மனைவியும் லோகேஸ்வரன் (கொழும்பு), கேதீஸ்வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), சசிகலா, சூரியகலா ஆகியோரின் அன்புத் தாயாரும் கருணாகரன், சிறிதரன், உதயகலா (கொழும்பு), சசிகலா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் பிரதாபன், பிருந்தாபன், பிரதீபா, பிரதீபன், பிரகாசினி, சர்மிலி. நிந்துஜா, தாட்சாஜினி, பிரபாலினி, தாரணி, தர்ச்சாஜினி, தர்ச்சுதன் (சுவிஸ்), நிலாஜினி (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்ற நடராஜா, மகேஸ்வரி, குமாரு, சிவக்கொழுந்து, தனபாலசிங்கம், பரமேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ஆசைமணி, சின்னத்துரை, புரமேஸ்வரி, செ. சண்முகநாதன், ஜீவரதி, ஆ. சண்முகநாதன், கனகலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-02-99) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பகல் 11-00 மணியளவில் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

'கமலா வாசா'
கந்தரோடை, சுன்னாகம். (63405)



எமது இன்றைய வீடியோ வெளியீடு!

சுரேஸ்கோபியின்
♣ பகையாளி
♣ பேய் பங்களா

சுப்பலோ வீடியோ
யாழ்ப்பாணம்
(சி/6617)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-02-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org